E.P.No.11/2022 நாள்: 17.09.2025

மா.சா. 1 திரு.அண்ணாமலை

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு சொந்தமான தாவா சொத்தின் புல எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் புல எண் ஞாபகம் இல்லை. விஸ்தீரணம் 1000 சதுரடி. மேற்படி 1000 சதுரடி இடம் எனது அனுபவத்தில் உள்ளதா என்றால் ஆமாம். மேற்படி 1000 சதுரடி இடம் திருவையாறில் எங்கு உள்ளது என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் குறிப்பிட்ட 1000 சதுரடி இடத்திற்கு அருகில் வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது.

2) தாவா சொத்தானது திருவையாறு – அரியலூர் மெயின் ரோட்டில் கிழமேல் வீதியில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு இருபுறமும் 10 வீடுகள் இருக்குமா என்றால் 9 வீடுகள் உள்ளது. அதில் எனக்கு வீடு உள்ளதா என்றால் இல்லை காலி மனை. மேற்படி மனை வாய்க்கால் ஒட்டி உள்ளது என்றால் ஆமாம். எனக்கு பாத்தியப்பட்ட 5–ம் நெம்பர் மனையில் சூரியமூர்த்தி என்பவரிடம் பாதியை கிரையம் செய்து கொடுத்துவிட்டு, பாதியை என் வசம் வைத்துள்ளேன்.

3) என்னுடைய மனையானது கடைசியாக வாய்க்காளை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.170/2015 வழக்கினை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்பில் எனது இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்புமும் செய்யாமல் வாய்க்காலின் மேல் மட்டும் பேரூராட்சி பாலம் கட்டுவதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் அதனை ஏற்று இந்நீதிமன்றம் தீர்ப்பும் தீர்ப்பாணையும் வழங்கியுள்ளதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4) எனது மனைக்கும் கிழக்கில் உள்ள வாய்க்காலுக்கும் கிழக்கில் மெர்சியா நகர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மெர்சியா நகரில் சுமார் 150 குடும்பங்கள் இருக்குமா என்றால் எனக்கு சரியாக தெரியாது. மேற்படி 150 குடும்பங்கள் பேரூராட்சி கட்டிய பாலம் மற்றும் சாலை வழியாகத்தான் வரவேண்டும் என்றால்

சரியல்ல. அவர்களுக்கு யசோதா நகர் வழியாக 22 அடி தார்சாலை மாற்று பாதை உள்ளது. நான் சொல்வதுபோல் மாற்று பாதை எதுவும் கிடையாது என்றாலும் பேரூராட்சி கட்டிய பாலம் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றாலும் சரியல்ல.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/ - Annamalai

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.09.17 19:09:53 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU